**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

**இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன**

(யோவான்: 20:31)

முதல் வாசகத்தில் தொடக்கால கிறிஸ்துவர்கள் எவ்வாறு ஆண்டவரையும் அவர்வழியாக, அப்போஸ்தலர்கள் செய்த அரும் அடையாளங்களையும் பெருமையாகப் பேசினார்கள்; இதன்வழியாக, ஆண்டவரிடம் நம்பிக்கைக் கொண்ட மக்கள், திரளாக சேர்க்கப்பட்டார்கள் என்பதையும் வாசிக்கின்றோம். இதற்குமுன் இயேசுவை சிலுவையில் அறைந்த அதிகாரிகளுக்குப் பயந்து, பூட்டிய சிறிய அறைக்குள் இருந்த சீடர்கள், இப்போது அனைவரும் கேட்கும்படியாக அவரது பெயரை துணிவோடு அறிவிக்கிறார்கள். எது அவர்களை மாற்றியது?

நற்செய்தியில் தோமா சொல்வதைக் கேட்கிறோம். “ நான் அவருடைய கைகளில் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய நான் நம்பமாட்டேன்” என்றார். தோமாவின் தயக்கத்தைப் புரிந்துகொள்வது அவ்வளவு கடினம் அல்ல; ஏனென்றால் சில நாட்களுக்கு முன்புதான் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை அவர் பார்த்தார். ஒருமுறை நம்பிக்கையையும், துணிவையும் இழந்தபின் மீண்டும் நம்பிக்கைக் கொள்வது கடினமாக இருந்தது. அவருடைய நண்பர்கள் உயிர்த்த இயேசுவைப் பார்த்திருந்தாலும், தானும் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார்.

இயேசு மீண்டும் அவர்களுக்குத் தோன்றியபோது, தோமாவின் நம்பிக்கைக் குறைவைப் பார்த்து இயேசு கோபப்படவில்லை. தோமாவின் உள்ளத்தை மூடிய வலியையும், அச்சத்தையும் அவர் புரிந்துகொண்டார். தோமா இன்னும் நம்பவில்லை அவர் மீண்டும் நம்பிக்கை கொள்வதற்கு அவருடைய உதவி தேவை என்பதையும் ஏற்றுக்கொண்டார்.

நாம் தொடர்ந்து, குறிப்பாக, வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்திற்காக உழைக்கும் நம்மில் பலர் சந்தேகத்துடனும், அச்சத்துடனும் போராடிக்கொண்டிருக்கிறோம். சில சமயங்களில் தோமாவைப் போல அதிக பயத்தில் மூழ்கிப்போகிறோம். நம்முடைய உள்ளங்களை தோமாவைப் போலக் கடவுளிடம் காட்டாமல் மூடிக்கொள்கிறோம். ஆனால் தோமாவிற்கு இயேசு தம்முடைய கைகளையும் விலாவையும் காட்டியதுபோல நமக்கும் இறைவன் தொடர்ந்து தம்முடைய கரங்களையும் விலாவையும் காட்டி, அச்சப்படவேண்டாம் என்றும் “ ஐயம் தவிர்த்து, நம்பிக்கை கொள்” என்றும் கூறுகிறார்.

தோமாவைப் போல நாமும் சிலசமயங்களில் கண்ணால் காணமுடியாத கடவுளிடம் நம்பிக்கைக் கொள்வது நமக்குக் கடினமாக இருக்கும். நாம் நேசிப்பவர்களால் நாம் ஏமாற்றப்பட்டும், காயப்பட்டும் இருப்போம். உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த வாக்குறுதிகளை நம்புவது அவ்வளவு எளிதானதல்ல. ஆனாலும், இன்றைய வாசகங்கள் அதைத் தான் செய்ய நம்மை அழைக்கின்றன. இயேசுவில் நம்பிக்கைக் கொள்ளவும், அவருடைய பெயரால் நாம் வாழ்வுபெறவும் இயேசு நம்மை அழைக்கின்றார்.

**இன்றைய வாசகங்கள்:**

திப: 5: 12-16;

திபா: 118: 2-4, 22-27;

திவெ: 1:9-13, 17-19;

யோவான்: 20:19-31.

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

24 ஏப்ரல் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

இறை இரக்கத்தின் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் (ஏப்ரல் 21)**



# விடுதலையும் அதிகாரமும் வாழ்க்கையை மாற்றக்கூடியவை

யோவான் தம்முடைய நற்செய்தியின் முடிவில் இவ்வாறு எழுதுகிறார். “ இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன” என்று கூறுகிறார். இயேசுவின் சீடர்கள் அனைவரும், இதை அனுபவங்களின் வழியாக உணர்ந்துள்ளனர். நீங்கள் இயேசுவையும், **அவர் தரும் மீட்பின் வாக்குறுதியையும் நம்பும் அந்த நேரத்தில் உங்களின் வாழ்க்கை இதுவரை இருந்ததுபோல் நிச்சயமாக ஒரேமாதிரியாக இருக்காது.**